வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

விலை ரூ. 30/=

மாருதி
Money Exchange (Pvt) Ltd.
MARUTHI MONEY EXCHANGE
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria Money Transfer றியா பணப்பரிமாற்றம்
Western Union Money Transfer வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 26.05.2026 செவ்வாய்க்கிழமை இதழ் : 140 பக்கங்கள் : 08

கிளிநொச்சியில் விபத்து;

## பாடசாலையில் பிள்ளையை ஏற்ற சென்ற தாய் உயிரிழப்பு



கிளிநொச்சி, மே. 26

கிளிநொச்சியில் மோட்டார் சைக்கிளை வேகமாக ஓடிச் சாகசம் செய்த இளைஞனின் மோட்டார் சைக்கிள் மோதி பாடசாலைக்கு பிள்ளையை ஏற்ற சென்ற தாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உருத்திரபுரம் பகுதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் அப்பகுதியை சேர்ந்த தாய் உயிரிழந்துள்ளார்.

உருத்திபுரம் - கரடிப்போக்குச் சந்திக்கு

07

# முள்ளிக்குளத்தில் 753 ஏக்கர் காணி நிபந்தனையுடன் விடுவிக்க ஏற்பாடு!

## பிரதி அமைச்சர் அருண ஜயசேகர



முல்லைத்தீவு, மே. 26

முள்ளிக்குளத்தில் கடற்படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள 1012 ஏக்கர் காணிகளில், 753 ஏக்கர் காணிகளை நிபந்தனைகளுடன் விடுவிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பிலான கலந்துரையாடல் மன்னார் மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

விடுவிக்கப்படும் காணி பகுதிகளில் காடழிப்புக்கள் உள்ளிட்ட சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுப்பதற்காக வனவளத்திணைக்களத்திடமே அந்தக் காணிகளை விடுவிக்கத் திட்டமிட்டுள்ளோம்.

ஏற்கனவே கடந்த 2016ஆம் ஆண்டு விடுவிக்கப்பட்ட

07

# வித்தியா கொலை குற்றவாளி யாழ்.சிறையில் உயிர் மாய்ப்பு!

## சடலத்தை பொறுப்பேற்க மறுத்தார் மனைவி

யாழ்ப்பாணம், மே. 26

புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை வழக்கின் மரண தண்டனைக் கைதி யாழ்ப்பாண சிறைச்சாலையில் நேற்று திங்கள் கிழமை தனது உயிரை மாய்த்துள்ளார்.

புங்குடுதீவு பகுதியை சேர்ந்த பூபாலசிங்கம் ஜெயக்குமார் (வயது 46) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

புங்குடுதீவு பகுதியை சேர்ந்த பாடசாலை மாணவி வித்தியா கடந்த 2015ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி பாடசாலைக்குச் செல்லும் வேளையில் கடத்தப்பட்டு, கூட்டு பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்.

07

# மக்கள் பிரதிநிதியல்லாத ஒருவர் நாட்டின் முடிவுகளை எடுக்கிறார்!

## சாடுகிறது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, மே. 26

மக்கள் பிரதிநிதியாக இல்லாத ஒருவர் நாட்டின் முடிவுகளை எடுக்கும் அளவுக்கு சக்திவாய்ந்த நபராக மாறியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உங்கள் அனைவருக்கும் தெரியும், இந்த அரசாங்கத்தின் முடிவுகளை அமைச்சரவையோ,

07

## வீரவன்ஸவுக்கு பிணை

கொழும்பு, மே. 26

கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸவை பிணையில் விடுவிப்பதற்கு நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

சந்தேக நபர் கடுவெல நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது, இந்த பிணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான 2

07

# தேர்தல் சட்டங்கள் குறித்து மீளாய்வு; மக்களிடம் கருத்து கேட்பதற்கு திட்டம்!

கொழும்பு, மே. 26

தேர்தல்கள் தொடர்பான சட்டங்களை (மாகாண சபை தேர்தல்களுடன் தொடர்பான சட்டங்கள் நீங்கலாக) மீளாய்வு செய்து, பாராளுமன்றத்துக்கு அறிக்கையிடுவதற்கும், அது தொடர்பிலான முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் சமர்ப்பிப்பதற்குமான பாரளுமன்ற விசேட குழு அதன் தலைவர் பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஏ.எச்.எம்.எச்.அபயரத்ன தலைமையில் பாராளுமன்றத்தில் கூடியது.

தேர்தல் முறைமை தொடர்பான சட்டம், அத்துடன் வாக்காளர்களைப் பதிவுசெய்யும் சட்டம், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம், பாராளுமன்ற தேர்தல்கள் சட்டம், ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பது தொடர்பான சட்டம், கடந்த காலங்களில் குறித்த சட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் மற்றும் குறித்த சட்டங்களின் ஏற்பாடுகளின் கீழான ஒழுங்குவிதிகள் என்பன இக்குழுவினால் மீளாய்வு செய்யப்படவுள்ளன.

அத்துடன், மேற்கூறிய சட்டங்களைத் திருத்தியமைத்தல், சீரமைத்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் ஆகியவற்றின் தேவையை மதிப்பிடுவதும், தேர்தல்கள் தொடர்பான தற்போதைய சட்டங்களுக்குத் தேவையான

07


## ஏற்றுமதி வருமானம் அதிகரிப்பு

கொழும்பு, மே. 26

இலங்கையின் வர்த்தகப் பொருட்கள் மற்றும் சேவைகள் ஆகிய இரண்டையும் உள்ளடக்கிய மொத்த ஏற்றுமதி வருமானம், கடந்த 2026 ஏப்ரல் மாதத்தில் 1,380.93 மில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியுள்ளதுடன், இது 2025 ஏப்ரல் மாதத்துடன் ஒப்பிடுகையில் 6 சதவீத ஆண்டு

07

# வடக்கு பொலிஸ் நிலையங்களுக்கு 134 வாகனங்கள் வழங்கிய இந்தியா!



கொழும்பு, மே. 26

இந்தியா அரசாங்கம், இந்தியா - இலங்கை நட்பு திட்டத்தின் கீழ் இலங்கை பொலிஸாரின் பயன்பாட்டிற்காக 134 ஒற்றை கப் வாகனங்களை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிடம் நேற்று உத்தியோகபூர்வமாக கையளித்துள்ளது.

இந்த நிகழ்வு நேற்று காலை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

சுமார் 300 மில்லியன் ரூபாய் பெறுமதியான இந்த வாகனங்கள் வட மாகாணத்திலுள்ள பொலிஸ் நிலையங்களில் சேவைக்காக பயன்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் உரையாற்றிய இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா, எதிர்காலத்திலும் இலங்கைக்கு இதுபோன்ற உதவிகளை வழங்க இந்தியா தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயல்படும் என தெரிவித்தார்.

07

# பலாலி பொலிஸார் பொய் வழக்கு!

## கஜேந்திரன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே. 26

பலாலி பொலிஸார் தாக்கல் செய்த பொய் வழக்கிற்கான வாக்குமூலம் நேற்று முன்தினம் பதிவு செய்யப்பட்டதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் நேற்று தெரிவித்தார்.

பலாலி பொலிஸாரால் தையிட்டி திஸ்ஸ விகாரை தொடர்பான வாக்குமூலம் பெறப்பட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இதனை தெரிவித்தார்.

07

# குற்றவாளிகளுக்கு தண்டனை ஆண்டாக இவ்வருடம் அமையும்

## பிரதி அமைச்சர் எரங்க குணசேகர

கொழும்பு, மே. 26

எமது நாட்டின் குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்க ஆண்டாக இது மாறும் என நகர அபிவிருத்தி பிரதி அமைச்சர் எரங்க குணசேகர தெரிவித்துள்ளார்

குருநாகலில் நடைபெற்ற நாட்டை கட்டியெழுப்பும் இளைஞர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த இளைஞர் மாநாடு நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாகாண சபைத் தேர்தல் குறித்து ரில்வினின் கருத்து முறையற்றது!

## மனோ கணேசன் சுட்டிக்காட்டு



கொழும்பு, மே. 26

மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவதாக வழங்கிய வாக்குறுதியை அரசாங்கம் மீறியுள்ளது. மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் ஆராய்வதற்கு பாராளுமன்ற விசேட செயற்குழு ஒன்று நியமிக்கப் பட்டுள்ளது. தேர்தலை நடத்துவதற்கான சாத்தியமான அறிகுறிகள் காணப்படுவதில்லை. ரில்வின் சில்வாவின் கருத்து முறையற்றது என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது- 2025 ஆம் ஆண்டு மாகாணசபைத் தேர்தலை நடத்துவதாக குறிப்பிட்டே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஆட்சிக்கு வந்தார். 2025 முடியாது 2026 ஆம் ஆண்டு தேர்தலை நடத்துவதாக பின்னர் குறிப்பிட்டார். இனப்பிரச்னைக்குத் தீர்வாகவே மாகாண சபைத் தேர்தல் அறிமுகப்படுத்தப் பட்டது. யுத்தம் முடிவடைந்தவுடன், மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டது.

காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ள மாகாணசபைத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்று பல்வேறு தரப்பினரும் தொடர்ச்சியாக வலியுறுத்தும் நிலையில் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா வடக்குக்குச் சென்று இந்த ஆண்டு மாகாண சபைத் தேர்தலை நடத்தப் போவதில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறு என்றால் மாகாணசபைத் தேர்தல் கடந்த ஆண்டும் இல்லை, இந்த ஆண்டும் இல்லை. மாகாண சபைத் தேர்தலை ஒருவருட காலத்துக்குள் நடத்துவதாக வழங்கிய வாக்குறுதியை அரசாங்கம் மீறியுள்ளது. மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் ஆராய்வதற்கு பாராளுமன்ற விசேட செயற்குழு ஒன்று நியமிக்கப் பட்டுள்ளது. அந்த குழுவில் நானும் உறுப்பினராக உள்ளேன். தேர்தலை நடத்துவதற்கான எவ்விதமான அறிகுறியும் அங்கு தென்படுவதில்லை.

டொலர் நெருக்கடி இல்லை, ரூபா நெருக்கடி இல்லை என்று 2022 ஆம் ஆண்டு கோட்டபய ராஜபக்ஷ, கப்ரால் ஆகியோர் குறிப்பிட்டார்கள். ஆனால் இறுதியில் நேர்ந்தது என்னவென்பதை அனைவரும் அறிவோம். தற்போதைய நெருக்கடியான நிலையில் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து தேசிய மட்டத்தில் செயற்பட வேண்டும். தற்போதைய நிலையில் நாட்டை பாதுகாப்பதற்கு முன்னுரிமை யளிக்க வேண்டும் என்பதையே வலியுறுத்துகிறோம் -என்றார். (அ)

# பொருளாதார வீழ்ச்சியை மீண்டும் சந்திக்க நேரிடும்!

## எதிர்க்கட்சித் தலைவர் எச்சரிக்கை

கொழும்பு, மே. 26

சர்வதேச நாணய நிதியத்துடன் அடுத்த கட்ட வாரிசு உடன்படிக்கை ஒன்றை நோக்கி அரசாங்கம் நகர வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்துள்ளார்.

உலக சந்தையில் எரிபொருள் விலையேற்றம் மற்றும் மத்திய கிழக்கில் நிலவும் மோதல் சூழல் போன்ற வெளிப்புற அழுத்தங்கள் அதிகரித்தால் நாடு மீண்டும் ஒரு பொருளாதார வீழ்ச்சியைச் சந்திக்க நேரிடும் என அவர் எச்சரித்துள்ளார்.

நேற்று முன் தினம் நடைபெற்ற கட்சி நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், நாட்டில் பொருளாதாரச் சிக்கல்கள் இல்லை எனவும், போதிய வெளிநாட்டு கையிருப்பு உள்ளதாகவும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க காட்டிக்கொள்ள முயன்றபோதிலும், பல்வேறு பொருளாதாரக் குறிகாட்டிகள் நாட்டின் தற்போதைய அபாயங்களையே வெளிப்படுத்துவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச தரத்தின்படி ஒரு நாட்டின் வெளிநாட்டு கையிருப்பு குறைந்தது மூன்று மாத கால இறக்குமதிச் செலவுகளை ஈடு செய்யக்கூடியதாக இருக்க வேண்டும் என்ற போதிலும், இலங்கை இன்னும் அந்த இலக்கை எட்டவில்லை என அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் மாதாந்த இறக்குமதிச் செலவு சுமார் இரண்டு பில்லியன் அமெரிக்க டொலர்களாகக் காணப்படும் பின்னணியில், தற்போதைய கையிருப்பு அதற்குப் போதுமானதாக இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், வெளிநாட்டுப் பணப்பாய்வு எட்டு பில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ள போதிலும், மத்திய கிழக்கு மோதல்கள் தீவிரமடைந்தால் அங்குள்ள இலங்கைத் தொழிலாளர்கள் வேலைவாய்ப்புகளை இழக்கும் அபாயம் உள்ளதாகவும், இது குறித்து அரசாங்கம் வெளிப்படையாகப் பேச மறுப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றம் சாட்டியுள்ளார். (அ)

# தேர்தல் ஆணைக்குழுவை அவமதிக்கிறார் ரில்வின்!

கொழும்பு, மே. 26

நாட்டின் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவா அல்லது ரில்வின் சில்வாவா என்ற சந்தேகம் எமக்கு காணப்படுகிறது. மாகாண சபைத் தேர்தலை இந்த ஆண்டு நடத்த முடியாது என்று குறிப்பிடுவ தற்கு மக்கள் விடுதலை முன்ன ணியின் பொதுச் செயலாள ருக்கு என்ன அதிகாரம் உள் ளது. ரில்வின் சில்வாவின் கருத் துக்கள் சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவை அவமதிப்பதாக அமைந்துள்ளது என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தலை இந்த ஆண்டு நடத்த முடியாது என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா குறிப்பிட்டுள்ளமை தொடர்பில் வினவிய போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-மாகாண சபைத் தேர்தலை எந்த தேர்தல் முறைமையின் கீழ் நடத்துவது என்பது தொடர்பில் பாராளுமன்ற செயற்குழுவின் ஊடாக தொடர் கலந்துரையாடல்களில் நாங்கள் ஈடுபட்டுள்ள நிலையில் மாகாண சபைத் தேர்தலை இந்த ஆண்டு நடத்த முடியாது என்று ரில்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் ஆராயும் பாராளுமன்ற விசேட செயற்குழு கடந்த வாரம் கூடியபோது பலவிடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது. மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய உத்தரவுகள், தீர்மானங்கள் மற்றும் எல்லை நிர்ணய சிக்கல்கள் தொடர்பில் ஆராய்ந்து சட்டமா அதிபர் திணைக்களம் 03 அவதானிப்புக்களை முன்வைத்துள்ளது.

இந்த விசேட செயற்குழு மூன்று மாத காலத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும் என்று பணிக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கான நகர்வுகளை நாங்கள் மேற்கொண்டுள்ளோம்.

சில்வாவின் கருத்துக்கள் சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவை அவமதிப்பதாக அமைந்துள்ளது.-என்றார். (அ)

# அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பும் போராட்டம் கம்பஹாவில் ஆரம்பம்!

## கூறுகிறார் சாமர சம்பத் தசநாயக்க

கொழும்பு, மே. 26

ஜனாதிபதி தலைகீழாக இருந்தாலும் டொலரின் பெறுமதி அதிகரிப்பதை தடுத்து நிறுத்த முடியாது. அதேநேரம் இந்த அரசாங்கம் தொடர்ந்து ஆட்சியில் இருந்தால் நாடு வீழ்ச்சியடைவதை தவிர்க்க முடியாது. அதனால் இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பும் போராட்டத்தை கம்பஹாவில் இருந்து ஆரம்பிப்போம் என சிறிலங்கா சுதந்திர கட்சியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்தார்.

பொய்யையும் திருட்டையும் ஒன்றாக தோற்கடிப்போம் எனும் தொனிப்பொருளில் கூட்டு எதிர்க்கட்சி கம்பஹா ஜாஎல பிரேதேசத்தில் நடத்திய மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து டொலரின் பெறுமதி பாரியளவில் அதிகரிக்கும் என நான் கடந்த பெப்ரவரி மாதத்தில் தெரிவித்திருந்தேன். அதேபோன்று எரிவாயு தட்டுப்பாடு ஏற்படும் என கடந்த மார்ச் மாதம் தெரிவித்திருந்தேன். அதேபோன்று தற்போது டொலரின் பெறுமதி பாரியளவில் அதிகரித்து சென்றுள்ளது. அதேபோன்று எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டு, விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. அதனால் டொலரின் பெறுமதி மேலும் அதிகரிக்கும். ஜனாதிபதி தலைகீழாக இருந்தாலும் அதனை தடுக்க முடியாது. ஏனெனில் இவர்களுக்கு நாட்டை நிர்வகிக்க தெரியாது.

ஊழல் மோசடியை இல்லாமலாக்குவதாக தெரிவித்தே ஆட்சிக்கு வந்தார்கள். தற்போது வாகனங்களுக்கான வரி அதிகரிப்பின் மூலம் பாரிய மோசடி இடம்பெற்றிருக்கிறது. வரி அதிகரிப்பதற்கு முன்னர் ஜனாதிபதி தனக்கு தேவையான வர்களுக்கு அது தொடர்பான அனைத்து தவகல்களையும் வழங்கவிட்டு, எதுவும் தெரியாது போன்று செயற்படுகிறார். அதனாலே வாகனங்களுக்கான வரி அதிகரிப்பு வர்த்தமானி வெளிவருவதற்கு ஒரு நாளைக்கு முன்னர் 4ஆயிரம் வாகனங்களுக்கு வங்கி கடன் பற்றுப்பத்திரம் திறக்கப்பட்டிருக்கிறது.

இந்த வாகனங்கள் மூலம் ஜனாதிபதி உள்ளிட்ட சிலருக்கு கொமிசன் இருக்கிறது. இதனால் நாட்டுக்கு கிடைக்க வேண்டிய பணம் பெலவத்தை கணக்கிற்கு செல்வதை இடமளிக்க முடியாது. அதனால் டொலரின் பெறுமதி மேலும் அதிகரிக்கும் . அதனை தவிர்க்க முடியாது. இதனால் தற்போது இந்த அரசாங்கத்துக்கு நாட்டை கொண்டு செல்ல முடியாமல் இருக்கிறது. அதனால் ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட பலருடன் ஜனாதிபதி கதைத்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. ஹர்ஷடி சில்வாவுடனும் கதைத்திருக்கிறார்கள். ஆனால் ஹர்ஷ இந்த அரசாங்கத்துடன் செல்ல மாட்டார் என்ற நம்பிக்கை இருக்கிறது.- என்றார். (அ)

# “சைபர் பாதுகாப்பு ஒழுங்கு அதிகாரசபை” விரைவில் நிறுவுவதற்கு அரசு நடவடிக்கை

கொழும்பு, மே. 26

இலங்கையில் உள்ள அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் அனைத்தும் வருடாந்த சைபர் பாதுகாப்பு இணக்கப்பாட்டு உத்தியை நடைமுறைப்படுத்துவதைக் கட்டாயமாக்கும் வகையில் புதிய சைபர் பாதுகாப்பு சட்டங்கள் தற்பொழுது தயாரிக்கப்பட்டு வருவதாக டிஜிற்றல் பொருளாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள அமைச்சின் செயலாளர் வருண சிறீ தனபால, இதுவரை சைபர் பாதுகாப்புச் செயல்பாடுகள் பெரும்பாலும் இலங்கை கணினி அவசர தயார்நிலை குழுவினால் அதாவது “ஸ்லிசேர்ட்“ அமைப்பினால் கையாளப்பட்டு வந்த போதிலும், புதிய சட்டங்களின் கீழ் “சைபர் பாதுகாப்பு ஒழுங்குமுறை அதிகாரசபை“ என்ற புதிய உத்தியோகபூர்வ அமைப்பு நிறுவப்படவுள்ளதாகக் குறிப்பிட்டார்.

அரச மற்றும் தனியார் ஆகிய இருதரப்பு நிறுவனங்களையும் கண்காணிக்கும் ஒழுங்குமுறை அதிகாரங்கள் இப்புதிய அதிகார சபைக்கு வழங்கப்படும் என்பதுடன்,

சைபர் குற்றங்களைத் தடுப்பதற்கான முற்காப்பு நடவடிக்கைகள் மற்றும் குற்றங்கள் நடந்த பின்னர் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் ஆகியன இதன் மூலம் மேற்செல்லப்படும்.

2019ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைவை அடிப்படையாகக் கொண்டு இப்புதிய சட்டம் உருவாக்கப்பட்டு வருகின்றபோதிலும், அண்மைக் காலமாக சமூக ஊடகங்கள் மற்றும் இணையம் சார்ந்த குற்றங்கள் அசுர வேகத்தில் அதிகரித்துள்ளதால் பல புதிய துறைகளும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன.

2007ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க கணினி குற்றச்சாட்டுகள் சட்டத்தில் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் இப்புதிய சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக டிஜிற்றல் உள்கட்டமைப்பு பிரதி அமைச்சர் எரங்க வீரரத்னவும் உறுதிப்படுத்தியுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

26.05.2026 செவ்வாய்க்கிழமை

பராபவ வருடம், வைகாசி 12

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# ரணில் நிசவாகத்தின் வழியில் அநுர குமார அரசாங்கம்

இலங்கையின் பொருளாதாரத்தைச் சீரழித்ததாக முன்னைய அரசாங் கங்களை குற்றஞ்சாட்டிய தேசிய மக்கள் சக்தி ஆட்சி அதிகாரத்துக்கு வந்த பின்னர் அதே பழைய அரசாங்கங்களின் குறிப்பாக, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளையே பின்பற்றி வருகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவித் திட்டத்தின் பிரகாரம் பொருளாதார மறுசீரமைப்பை முன்னெடுப்பதை தவிர, இலங்கை மீண்டெழுவதற்கு வேறு மார்க்கமே இல்லை என்று விக்கிரமசிங்க கூறினார். அரச வருமானத்தை அதிகரிப்பதற்காக சர்வதேச நாணய நிதியம் விதித்த நிபந்தனைகளை குறிப் பாக, சிக்கனத் திட்டங்களை விக்கிரமசிங்க அரசாங்கம் நடைமுறைப்படுத்தி யதன் விளைவாக மக்கள் பெரும் இடர்பாடுகளுக்கு உள்ளானார்கள்.

பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் சுமையை பெருமளவுக்கு. சாதாரண மக்கள் மீது திணிக்கும் நிபந்தனைகளை மாற்றியமைப்பதற்காக சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையை மீள் பேச்சுவார்த் தைக்கு உட்படுத்தப்போவதாக 2024 தேசிய தேர்தல்களின்போது வாக்குறு தியளித்த தேசிய மக்கள் சக்தியினால் பதவிக்கு வந்த பிறகு அதைச் செய்ய முடியவில்லை. தொடர்ந்து நாணய நிதியத்தின் நிபந்தனைகளின் பிரகாரமே பொருளாதாரத்தை நிர்வகித்து வருகிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதா னால் ரணில் அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளையே அது பின்பற் றுகிறது.

நல்லாட்சி அரசாங்க காலத்தில் மாகாணசபை தேர்தல் சட்டத்துக்கு குழப் பகரமான திருத்தம் ஒன்றைக் கொண்டு வந்து பல வருடங்களாக மாகாண சபை தேர்தல்களை நடத்த முடியாத நிலையை ஏற்படுத்திய விக்கிரமசிங்க 2022 2024 காலப்பகுதியில் ஜனாதிபதியாக இருந்தபோது தோல்விப் பயம் காரணமாக உள்ளூராட்சி தேர்தல்களை நடத்தாமல் இருப்பதற்கு சூழ்ச்சித்த னமான பல காரியங்களில் ஈடுபட்டார். அந்த தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கத்திடம் பணம் இல்லை என்றும் அவர் கூறினார்.

உள்ளூராட்சி தேர்தல்களுக்கென்று ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை அர சாங்கம் நிறுத்தி வைக்கமுடியாது என்று உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை யும் கூட அவமதித்த விக்கிரமசிங்க தனது பதவிக்காலத்தின் இறுதிவரை அந்த தேர்தல்களை நடத்தவில்லை. தேர்தல்களை விடவும் மக்களின் அடிப்படைப் பொருளாதாரத் தேவைகளை நிறைவேற்றுவதே முக்கியமானது என்று அவர் வாதிட்டார்.

மாகாண சபை தேர்தல்களை நடத்தாமல் இருப்பதிலேயே குறியாக இருக் கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அதற்கு இதுவரை தேர்தல் சட்டத்தை கார ணமாகக் கூறி வந்தது. எந்த தேர்தல் முறையின் கீழ் மாகாண சபைகளுக்கு தேர்தலை நடத்துவது என்று ஆராய்வதற்காக அரசாங்கம் பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றையும் நியமித்தது. அந்த தெரிவுக்குழு மூன்று மாதங்க ளில் அறிக்கையைச் சமர்ப்பிக்கும் என்று கூறப்பட்டது. அந்த மூன்று மாதங்க ளும் கூட முடிவுக்கு வருகின்றன.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்திருந்த தேசிய மக்கள் சக்தியின் தலைமைத்துவக் கட்சியான ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) வின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா செய்தியாளர் மகாநாட்டில் உரையாற்றிய போது மாகாணசபை தேர்தல்களை நடத்துவதற்காக இவ்வருடத்துக்கான பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை கடந்த நவம்பரில் டித்வா சூறா வளியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணங்களை வழங்கு வதற்கும் புனர்வாழ்வுத் திட்டங்களை முன்னெடுப்பதற்கும் அரசாங்கம் செலவிட்டு விட்டதாகவும் அதனால் அடுத்த வருடம் தான் மாகாண சபை தேர்தல்களை நடத்துவது குறித்து ஆராயமுடியும் என்றும் கூறியிருக்கிறார்.

மீண்டும் பொருளாதார வீழ்ச்சி ஒன்று ஏற்படக்கூடிய அபாயம் குறித்து அச்சம் வெளியிடப்படுகின்ற ஒரு தருணத்தில் ரில்வின் சில்வா இவ்வாறு கூறியிருப்பது நிதி நெருக்கடியை காரணம் காட்டி மாகாண சபை தேர்தல் களை சாத்தியமானளவுக்கு பின்போட்டுக்கொண்டு போகலாம் என்ற நோக் கம் அரசாங்கத்துக்கு இருக்கிறது என்று சந்தேகிக்க வைக்கிறது.

பொருளாதார விவகாரங்களில் ரணில் விக்கிரமசிங்க கடைப்பிடித்த கொள் கைகளை பின்பற்றும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தன்னால் வெற்றிபெற முடியாது என்று தேர்தல்களைப் பின்போடுவதற்கு சாக்குப் போக்குகளைத் தேடுவதிலும் அவரைப் போன்றே செயற்படுகிறது. முறைமை மாற்றம், புதிய கலாசாரம் என்பவற்றின் இலட்சணம் இவ்வாறாக இருக்கிறது.

# ஹோர்முஸ் நீரிணை முட்டுக்கட்டையை அமெரிக்காவாலோ அல்லது ஈரானாலோ காலவரையறை இன்றி நீடிக்க முடியாது




வெறுமனே காலத்தைக் கடத்துவது ஈரானியர் களுக்கு ஒரு பேரழிவாக அமையலாம், அதேவேளை, தான் உருவாக்கிய இந்த பொருளாதார நெருக்கடியை தீர்க்க வேண்டிய கட்டாயத்தில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இருக்கிறார்.

ஈரானுக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான பரஸ்பர துப்பாக்கிச் பிரயோக சம்பவங்கள் மத்திய கிழக் கில் நிலவும் தீவிரமான ஸ்திரமற்ற நிலையை வெளிப்படுத்துகின்றன. அமெரிக்கா நடத் திய தாக்குதல்கள் வெறும் "அன்பான தட்டல்கள்" (*love tap*) என்று டிரம்ப் கூறினாலும், உண்மை என்ன வென்றால், ஹார்முஸ் நீரிணையில் நிலவும் இந்த அதிக ஆபத்து நிறைந்த மோதல் போக்கை இரு தரப்பின ராலும் காலவரையறை இன்றி தொடர முடியாது.

அமெரிக்காவும் அதன் நட்பு நாடான இஸ்ரே லும் ஈரானை விட விரிவான இராணுவ மேலாதிக் கத்தை வெளிப்படுத்தின - 38 நாள் போரில் குறைந் தபட்ச உயிர்ச் சேதத்தையே சந்தித்தன - ஆனால் வாஷிங்டன் அதை ஒரு மூலோபாய ஆதிக்கமாக மாற்றுவதில் தோல்வியடைந்ததுடன், நீரிணையை ஈரான் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரவும், அதன் மூலம் எண்ணெய் விலையை உயர்த்தவும் அனுமதித்துவிட்டது.

ஹோர்முஸ் நீரிணையை ஈரானின் கட்டுப்பாட் டில் இருந்து விடுவிக்க டிரம்ப் முன்னெடுத்த "புரா ஜெக்ட் ஃப்ரீடம்" (Project Freedom) வெறும் 50 மணி நேரத்திலேயே கடந்த செவ்வாய்க்கிழமை தோல்வியடைந்தது முக்கியமான ஒரு நிகழ்வாகும்.

100 இற்கும் மேற்பட்ட போர் விமானங்கள் மற் றும் பல கடற்படை அழிப்பு கப்பல்களைப் பயன் படுத்தி, நீரிணையின் தெற்குப் பகுதியான ஓமன் பக் கத்தில் வர்த்தகக் கப்பல்களுக்குப் பாதுகாப்பான மண்டலத்தை உருவாக்குவதை இந்த ஒருதலைப் பட்சமான அமெரிக்கத் திட்டம் நோக்கமாகக் கொண் டிருந்தது. இரண்டு வணிகக் கப்பல்கள் மட்டுமே இதைப் பயன்படுத்திக் கொண்டன.

சவூதி அரேபியாவின் ஆட்சேபனைகளுக்கு மத் தியில் இது முடிவுக்கு வந்தது. இந்தத் திட்டம் தொடங்கப்படுவதற்கு முன்பு சவூதியிடம் ஆலோ சிக்கப்படவில்லை. "புராஜெக்ட் ஃப்ரீடம்" மீண்டும் ஒரு முழு அளவிலான போரைத் தொடங்கிவிடக்கூ டும் என்ற கவலையில், அமெரிக்காவிற்குத் தனது வான்வெளி மற்றும் தளங்களைப் பயன்படுத்த சவூதி அரேபியா அனுமதி மறுத்தது.

மேலும் இது குறித்து பெரிய கப்பல் போக்குவ ரத்து நிறுவனங்களுடன் விவாதிக்கப்படவில்லை, அது பயனுள்ளதாக இருக்குமா என்பதும் தெளிவா கத் தெரியவில்லை.

கப்பல் போக்குவரத்துத் துறை சார்ந்த "லாயிட்ஸ் லிஸ்ட்" (Lloyd's List) இதழின் ஆசிரியர் ரிச்சர்ட் மேட் இது குறித்துக் கூறுகையில்: "எங்களுக்குத் தெரிந்தவரை எந்தவொரு பெரிய தொழில் நிறுவ னத்தையும் விளக்கக் கூட்டத்திற்காக அமெரிக்கா அணுகவில்லை. இப்பகுதியில் உள்ள பாதுகாப்புக் குழுக்களுக்கு என்ன நடக்கிறது என்பது இன்னும் புரியவில்லை, நான் பேசிய எந்தவொரு கப்பல் உரிமையாளரும் இது எதையும் மாற்றும் என்று நம்பிக்கை கொள்ளவில்லை," என்றார்.

ஹோர்முஸ் நீரிணை வழியாகச் செல்லும் எண் ணெய்க் கப்பல்களை அச்சுறுத்தவும், சேதப்படுத்த வும் பிற கப்பல் போக்குவரத்துக்கள் சகலதையும் திறம்பட நிறுத்தவும் ஈரானுக்கு இன்னும் ஆற்றல் உள்ளது.

"எஸ்ரூபி குளோபல் மார்க்கெட் இன்டலிஜென்ஸ்" தகவல்படி, 1,550-க்கும் மேற்பட்ட கப்பல்கள் வளை குடா பகுதியில் சிக்கியுள்ளன, அதே நேரத்தில் புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் எந்த வணிகக் கப்பல் களும் நீரிணையை கடக்கவில்லை.

"ராயல் யுனைடெட் சர்வீசஸ் இன்ஸ்டிடியூட்" (RUSI) சிந்தனைக் குழுவின் மத்திய கிழக்கு நிபு ணர் புர்சு ஒசெலிக் கூறுகையில்: "ஈரான் ஒரு வலிமை யான எதிரி என்பதை நிரூபித்துள்ளது, பலர் கணிக் கத் தவறிய மீண்டெழும் தன்மையை (resilience) அது வெளிப்படுத்தியுள்ளது. டிரம்ப் ஒரு விரைவான வெற்றியை விரும்பினார், ஆனால் ஈரான் ஆட்சியை முறையாக அகற்றுவதற்குத் தேவையான கணிசமான இராணுவப் படையை ஈடுபடுத்த அவர் தயாராக இல்லை," என்றார்.

முடிவெடுப்பதில் சிதறல்கள் காணப்பட்டாலும், ஈரானிய அதியுயர் தலைவர் தலைவர் மொஜ்தபா கமேனியின் உடல்நிலை குறித்து பொதுவெளியில் தெளிவற்ற சூழல் நிலவினாலும், அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதல்கள் தற் காலிகமாக ஈரான் ஆட்சியை பலப்படுத்தியுள்ளதா கவே பெரும்பாலான மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

இந்த வாரம் கசிந்த அமெரிக்க மத்திய புலனாய்வு நிறுவனத்தின் (சி.ஐ.ஏ.) மதிப்பீடுகளின்படி, ஈரா னிடம் இன்னும் 70 சதவீத ஏவுகணைகளும், 75 சதவீத ஏவுகணை ஏவுதளங்களும் (launchers) மீதமுள்ளன் மேலும், பாதியளவு "ஷா ஹேத்" (Shahed) தாக்கு தல் ட்ரோன்களும் அதனி டம் இருக்கலாம் எனக் கரு தப்படுகிறது.

தனது அணு ஆயுதத் திட்டத்தை முழுமையாகக் கைவிட வேண்டும் என்ற அமெரிக்காவின் கோரிக்கையை ஈரான் துணிச்சலு டன் எதிர்த்து வருகிறது. அணுசக்தி மையங்களை அகற்றுதல், 20 ஆண்டுகளுக்கு செறிவூட்டல் பணி களுக்குத் தடை மற்றும் ஆயுதத் தரத்திலான யூரே னியத்தை ஒப்படைத்தல் ஆகிய கோரிக்கைகள் இதில் அடங்கும்.

"எபிக் ஃபியூரி" (Epic Fury) இராணுவ நடவ டிக்கையின் போது, சுமார் 25 பில்லியன் டொலர் கள் செலவில் அமெரிக்காவின் உயர்தர ஏவுகணை கையிருப்பு கால் பகுதி முதல் அரை பகுதி வரை குறைந்துள்ள நிலையில், ட்ரம்ப் மீண்டும் ஒரு முழு மையான குண்டு வீச்சுத் தாக்குதலைத் தொடங்க விரும்பவில்லை என்பதை ஈரான் உணர்ந்துள்ளது.

ஈரானிய பேச்சுவார்த்தையாளர்களுடன் பழகிய இராஜதந்திரிகள், ஈரான் தன்னிடம் போதிய கால அவகாசம் இருப்பது போலவே எப்போதும் அவர் கள் நடந்து கொள்வதாகக் குறை கூறுகின்றனர். ஆனால் யதார்த்தம் அவ்வாறு இல்லை. ஹோர்முஸ் நீரிணைக்கு கிழக்கே இரண்டு அமெரிக்க விமானம் தாங்கி கப்பல் குழுக்கள் நிலைநிறுத்தப்பட்டு மேற் கொள்ளப்படும் முற்றுகை, ஈரான் மசகு எண்ணெயை ஏற்றுமதி செய்வதைத் தடுக்கிறது.

ஏப்ரல் 13 முதல் 52 கப்பல்களை அமெரிக்க மத் திய கட்டளை (US Central Command) திருப்பி அனுப்பியுள்ளது. ஈரானுக்குள் பணவீக்கம், வேலை யின்மை மற்றும் வழங்கப்படாத ஊதியங்கள் குறித்த புகார்கள் எழுந்துள்ளன.

கடந்த புதன்கிழமை, ஈரானின் முதன்மை பேச்சு வார்த்தையாளர் முகமது பாகர் காலிபாப், அமெ ரிக்கா "கடற்படை முற்றுகை, பொருளாதார அழுத் தம் மற்றும் ஊடக கையாளுதல்" மூலம் நாட்டின் ஒருமைப்பாட்டை குலைக்க அமெரிக்கா முயற்சிப் பதாகக் கூறி ஈரானின் எதிர்ப்பை உறுதிப்படுத்த முயன்றார். வாஷிங்டன் போஸ்ட் இதழில் கசிந்த அமெரிக்க உளவுத்துறை அறிக்கை, ஈரான் இன்னும் மூன்று முதல் நான்கு மாதங்கள் வரை மட்டுமே தாக்குப் பிடிக்க முடியும் என்றும், அதன் பிறகு கடு மையான பொருளாதார நெருக்கடியைச் சந்திக்கும் என்றும் கூறுகிறது.

இந்தத் தனிமைப்படுத்தப்பட்ட சூழலில் ஈரா னுக்கு நெருக்கமான கூட்டாளிகள் எவரும் இல்லை. ரஷ்யாவிற்கு உதவுவது போலவே, சீனாவும் ட்ரோன் பாகங்களை வழங்கி வருவதாக நம்பப்படுகிறது. மேலும், கையடக்க வான் பாதுகாப்பு அமைப்பு களை சீனா இரகசியமாக அனுப்பக்கூடும் என்ற செய்திகள் வந்தாலும், அவை அடிப்படை தற்காப்பு ஆயுதங்கள் மட்டுமே.

ரஷ்யாவின் ஜி.ஆர்.யூ. இராணுவ உளவுத்துறை தயாரித்த அறிக்கையின்படி, மாஸ்கோ 5,000 ஃ பைபர்-ஆப்டிக் ட்ரோன்களை அனுப்பக் கூடும் இவை வளைகுடா பகுதியில் உள்ள தீவுகளை அமெரிக்கத் தரைப்படை கைப்பற்ற முயன்றால் மட்டுமே பயனுள்ளதாக இருக்கும்.

எந்தவொரு இராணுவ மோதலும் ஈரானுக்கு எவ்வாறு உதவும் என்பது தெளிவாகத் தெரிய வில்லை. அமெரிக்காவின் முற்றுகையை அந்த நாட் டாலும், ஆட்சியாலும் எவ்வளவு காலம் தாங்க முடி யும் என்பதைக் கணிப்பது கடினம். "ஆரம்பத்தில் உயிர் பிழைப்பதே வெற்றியாகக் கருதப்படும், ஆனால் ஒரு கட்டத்தில் அது போதுமானதாக இருக்காது.

ஈரான் அந்த நிலையை எப்போது எட்டும் என் பது நமக்குத் தெரியாது" என்கிறார் ஆய்வாளர் ஒசெலிக்.

மறுபுறம், ஜனாதிபதி ட்ரம்ப் எவ்வாறு நடந்து கொள்வார் என்பதை கண்பிட முடியவில்லை. அவர் பொறுமையற்றவராகவும் இருக்கிறார். தான் உருவாக்கிய ஒரு பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண வேண்டிய அரசியல் கட்டாயத்தில் அவர் உள்ளார் அதே சமயம் அணுசக்தி விவகாரத்தில் முன்னேற்றத்தைக் காட்ட வேண்டிய சூழலிலும் இருக்கிறார்.

உலகப் பொருளாதாரத்தில் ஏற்கனவே பணவீக் கம் அதிகரித்து வரும் நிலையில், ஆசியாவில் எண் ணெய் தட்டுப்பாட்டின் தாக்கம் மிகக் கடுமையாக உள்ளது. இது ஒரு நிலையற்ற சூழலாகும், இப்போ தும் இரு நாடுகளின் இராணுவங்களும் தாக்குதலுக் குத் தயாரான நிலையில் நேருக்கு நேர் மோதி நிற் கின்றன.

(டொன் சப்பாக், த கார்டியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மே - 26 செவ்வாய்க்கிழமை
பராபவ வருடம் - வைகாசி 12
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 03.30 - 04.30
திதி : ஏகாதசி




**மேடம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். அமோகமான நாள்.

**இடபம்**
புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்யோகம் குறித்து யோசிப்பீர்கள். ஆடம்பரச் செலவுகளை குறைத்து சேமிக்க தொடங்குவீர்கள்.

**மிதுனம்**
அரசு காரியங்கள் சாதகமாக முடியும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். பழைய கடனைத் தீர்க்க புது வழி யோசிப்பீர்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**கடகம்**
சொத்து பிரச்னைக்கு நல்ல தீர்வு கிடைக்கும். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். தன்னிச்சையாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் பக்கபலமாக இருப்பார்கள்.

**சிம்மம்**
குடும்பத்தில் இதுவரை வந்த பிரச்னைகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் உண்டு. நீண்ட நாள் இருந்து வந்த பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்கும்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள். கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். முன்கோபத்தை தவிர்க்க வேண்டிய நாள்.

**துலாம்**
திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். உறவினர் நண்பர்களுடன் விரிசல்கள் வரக்கூடும். வாகனத்தில் கவனம் தேவை. தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**விருட்சிகம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உடன் பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார்.

**தனுசு**
மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். உங்கள் பிடிவாதப் போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். சாதிக்கும் நாள்.

**மகரம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் டென்ஷன் குறைந்து மனதில் மகிழ்ச்சியாக இருக்கும். குடும்பத்தில் நிம்மதி உண்டு. பாதியில் நின்ற வேலைகள் முடியும். புதிய பாதை தெரியும் நாள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சந்தேகபடுவதை முதலில் நிறுத்துங்கள். குடும்பத்தில் உள்ளவர்கள் யாரும் தன்னைப் புரிந்துக் கொள்ளவில்லை என ஆதங்கப்படுவீர்கள்.

**மீனம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். சகோதர வகையில் நன்மை உண்டு. கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் மாணவர்களுக்கு உதவிகள்



யாழ்ப்பாணம், மே. 26

வடமராட்சி தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் வவுனியா வடக்கு மற்றும் முல்லைத்தீவு பகுதிகளில் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டன.

நெடுங்கேணி, மாமடுச்சந்தி கற்பகா அறநெறிப் பாடசாலையிலுள்ள 60 மாணவர்களுக்கு 145,000 ரூபா பெறுமதியான சீருடைகளும், முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள முத்துஐயன் கட்டு இடதுகரை அரசினர் தமிழ் கலவன் வித்தியாலயத்தில் கற்கின்ற இடதுகரை, ஜீவ நகர், குளக்கட்டு கிராமங்களைச் சேர்ந்த, 10 மாணவர்களுக்கு 518,500 ரூபா பெறுமதியான 10 சைக்கிள்களும் வழங்கப்பட்டன.

குறித்த உதவிகளை சந்நிதியான் அச்சிரம முதல்வர் சாதனை தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் நேரடியாக சென்று வழங்கினார். (அ)

# பிறந்து நான்கு மாதங்களேயான ஆண் குழந்தை யாழில் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மே. 26

யாழ்ப்பாணத்தில் பிறந்து 4 மாதங்களேயான ஆண் குழந்தை ஒன்று நேற்று முன் தினம் உயிரிழந்துள்ளது. வரணி - இயற்றாலை பகுதியைச் சேர்ந்த தவகுமார் பஸ்மிலன் என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குறித்த குழந்தை கடந்த 23ஆம் திகதி சுவாசிப்பதற்கு சிரமப்பட்டது.

இந்நிலையில் குழந்தையை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி குறித்த குழந்தை நேற்று முன் தினம் அதிகாலை உயிரிழந்துள்ளது. குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-05)

# வைத்தியக்கலாநிதி சண்முகராஜாவை கௌரவிக்கும் நிகழ்வு முல்லைத்தீவில்!

முல்லைத்தீவு, மே. 26

வைத்திய கலாநிதி வீரகத்திபிள்ளை சண்முகராஜாவின் மருத்துவ சேவையை பாராட்டும் நிகழ்வும் தேசத்தின் மருத்துவ மகுடம் விருது வழங்கும் நிகழ்வும் முல்லைத்தீவில் இடம்பெற்றது.

யுத்த காலத்தில் தன்னுயிரை பொருட்படுத்தாது மருத்துவ துறையில் மக்களுக்காக அளப்பெரும் பணியாற்றிய வைத்திய கலாநிதி வீரகத்திபிள்ளை சண்முகராஜாவை கௌரவிக்கும் வகையில் ஙந்த நிகழ்வு இடம்பெற்றது.

அவரை வாகனப் பேரணியாக நாதஸ்வர மேள வாத்தியங்களுடன் வீதியின் இரு மருங்கிலும் நின்று மலர் தூவி முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச மைதானம் வரை அழைத்து வரப்பட்டு நிகழ்வுகள் இடம்பெற்று விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மக்களின் ஏற்பாட்டில் வைத்தியர் சுதர்சன் தலைமையில் ஆரம்பமான குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக விழா நாயகன் வீரகத்திபிள்ளை சண்முகராஜா, திருமதி சண்முகராஜா, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர், இலங்கை பல்கலைக்கழக மானியங்களின் ஆணைக்குழு உறுப்பினர், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர், பாராளுமன்ற உறுப்பினர்கள், தவிசாளர், பிரதேச சபையின் உறுப்பினர்கள், ஓய்வு நிலை ஆசிரியர்கள், வைத்தியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், சமூக ஆர்வலர்கள், நலன்விரும்பிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# தங்க நகைகள், மோட்டார் வாகனங்களுக்கான கடன்களுக்கு இனி கடுமையான விதிமுறைகள்

கொழும்பு, மே. 26

தங்க நகைகள் மற்றும் மோட்டார் வாகனங்களுக்காக பெற்றுக்கொள்ளப்படும் கடன்களுக்கான விதிமுறைகளைக் கடுமையாக்குவதற்கு இலங்கை மத்திய வங்கி உத்தியோக பூர்வமாகத் தீர்மானித்துள்ளது

வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் மூலமாக மேற்கொள்ளப்படும் கடன் வழங்கும் செயல்முறைகளை மேலும் ஒழுங்குபடுத்தவும், நாட்டின் நிதி அமைப்பின் ஸ்திரத்தன்மையைப் பாதுகாக்கவும் இந்த புதிய கட்டுப்பாடுகள் நேற்று முன் தினம் முதல் நடைமுறைக்கு வந்தன.

அண்மைக் காலமாகத் தங்க நகைக் கடன்கள் மற்றும் வாகனக் கொள்வனவுக்கான நிதியுதவிகள் பாரியளவில் அதிகரித்துள்ள நிலையில், உலகளாவிய அரசியல் மற்றும் பொருளாதார பதற்றங்கள் காரணமாகத் தங்கம் உள்ளிட்ட சொத்துக்களின் விலைகளில் பெரும் ஏற்ற இறக்கங்கள் ஏற் பட்டுள்ளதால் இந்தத் தீர்ம னம் எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது

வாகன இறக்குமதி மீதான தற்காலிக கூடுதல் கட்டணம் மற்றும் நாணய மாற்று விகிதத்தின் மாறுபாடுகள் காரணமாக வாகனங்களின் விலைகள் தற்காலிகமாக அதிகரிக்கக்கூடும் என்பதால்,

பிணையாக வைக் கப்படும் சொத்துக்களின் மதிப் பில் ஏற்படும் ஆபத்துக்களைக் குறைப்பதே இதன் பிரதான நோக்கமாகும் இதற்கமைய, தங்க நகைப் பிணைக் கடன்களுக்கான அதிகபட்ச கடன் மதிப்பு விகிதம் 70 வீதமாகக் குறைக் கப்பட்டுள்ளது

அதாவது, அடகு வைக்கப்படும் தங்கத்தின் மதிப்பில் 70 வீதத்தை மட்டுமே இனிமேல் கடனாகப் பெற முடியும் என்பதுடன், இந்த விதிமுறை புதிய கடன்களுக்கும், நேற்று முன் தினம் முதல் புதுப்பிக்கப்படும் பழைய கடன்களுக்கும் பொருந்தும்

அதேவேளை,மோட்டார் வாகனங்களுக்காக வழங்கப்படும் கடன்களுக்கான தற்போதைய வரம்புகளும் 10 வீதத் தால் குறைக்கப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி மேலும் அறிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 2029 இல் அநுரவின் வெற்றியை யாராலும் தடுத்துவிடமுடியாது!

## அமைச்சர் சுனில் குமார கமகே

கொழும்பு, மே. 26

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க 2029 ஆம் ஆண்டு மீண்டும் தெரிவு செய்யப்படுவதை யாராலும் தடுக்க முடியாது என அமைச்சர் சுனில் குமார கமகே தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் நாட்டின் பொருளாதாரத்தை நிலைநிறுத்தியுள்ளதுடன், பொதுமக்களின் நம்பிக்கையையும் அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அமைச்சர், தவறான முடிவுகளால் இலங்கை இதற்கு முன்னர் "திசையற்றதாக" மாறியிருந்ததாகவும், ஆனால் தற்போதைய நிர்வாகம் அந்த நிலையை மாற்றியுள்ளதாகவும் வலியுறுத்தினார்.

வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களின் ஆதரவு,



நாடு தனது வரலாற்றிலேயே மிக உயர்ந்த வெளிநாட்டுத் தொழிலாளர் பணப்பரிமாற்றத்தைப் பதிவு செய்ய பங்களிப்பு செய்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (அ)

# கண்டியில் 5 மாடிக் கட்டடத்தின் ஒரு பகுதி இடிந்து விழுந்ததில் மூன்று பேர் படுகாயம்!

கொழும்பு, மே. 26

கண்டி, கொட்டுகொடல்ல வீதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகிலுள்ள தனியார் 5 மாடி கட்டடமொன்றின் மேலதிக கட்டுமானப் பணிகள் இடம் பெற்றுக் கொண்டிருந்தபோது, அதன் ஒரு பகுதி திடீரென இடிந்து விழுந்து விபத்துக் குள்ளானது.

இந்த விபத்தின்போது கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த மூன்று தொழிலாளர்கள் மீது இரும்பு மற்றும் சிமெந்து இடிபாடுகள் வீழ்ந்து அவர்கள் படுகாயமடைந்தனர்.

அங்கிருந்த பொதுமக்கள் உடனடியாக காயமடைந்தவர்களை மீட்டு, அவசர சிகிச்சைக்காக வாகனங்கள் மூலம் கண்டி தேசிய வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

காயமடைந்தவர்களின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால், அவர்களுக்கு அவசர அறுவைச் சிகிச்சைகளை மேற்கொள்ள வைத்தியசாலைக் குழுவினர் நடவடிக்கை எடுத்துள்ளதாக வைத்தியசாலைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தக் கட்டுமானப் பகுதி மிகவும் ஆபத்தான மற்றும் பாதுகாப்பற்றது என தெரிவிக்கின்றனர். (அ)

# ஜூலை மாதம் முதல் பஸ் கட்டணம் உயரும்

கொழும்பு, மே. 26

எதிர்வரும் ஜூலை மாதம் முதல் பஸ் கட்டணங்களை அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளதாக இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் மாற்று விகிதம் தொடர்ந்து அதிகரித்து வருவதன் காரணமாக, உள்நாட்டில் எரிபொருள் விலைகள் உயரும் சாத்தியக் கூறுகளைக் கருத்திற் கொண்டு இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதன்போது, குறைந்தபட்ச பஸ் கட்டணம் எவ்வளவு அதிகரிக்கப்படும் என்பது குறித்து இதுவரை இறுதி முடிவு எடுக்கப்படவில்லை எனத் தெரிவித்த கெமுனு விஜேரத்ன, இது தொடர்பான முதற்கட்டக் கலந்துரையாடல்களும் கணக்கீடுகளும் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டார்.

புதிய பஸ் கட்டணக் கணக்கீடுகள் ஜூன் மாத ஆரம்பத்தில் இறுதி வடிவம் பெறவுள்ளன. அதன் பின்னரே புதிய கட்டணப் பட்டியல் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படும்.

இதன்படி, தற்போது 30 ரூபாயாக அறிவிடப்படும் குறுகிய தூரப் பயணங்களுக் கான குறைந்தபட்ச பஸ் கட்டணம், ஜூலை முதல் 40 ரூபாய் வரை அதிகரிக்கப்பட வாய்ப் புள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் நிலுவைகளைச் செலுத்துவதற்காக அரசாங்கம் நிதிப் பற்றாக்குறையைச் சமன் செய்ய முற்படும்போது, எரிபொருள் விலைகளை உயர்த்த நேரிடலாம் என தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் அச்சம் வெளியிட்டுள்ளது.

அவ்வாறு எரிபொருள் விலை உயர்த்தப்பட்டால், பயணிகள் போக்குவரத்து சேவை வழங்குநர்கள் கடுமையாகப் பாதிக்கப்படுவர் என்றும், போக்குவரத்துத் துறையில் நட்டமடையாமல் தப்பிப் பிழைப்பதற்குக் கட்டணங்களை உயர்த்துவதைத் தவிர வேறு வழியில்லை என்றும் விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

# பெண்களுக்கு ஏற்படும் கர்ப்பப்பை வாய் புற்றுநோயை கண்டறிய புதிய நடவடிக்கை!

கொழும்பு, மே. 26

இலங்கைப் பெண்களுக்கு ஏற்படும் புற்றுநோய்களில் 5 ஆவது இடத்தில் உள்ள கர்ப்பப்பை வாய் புற்றுநோயைக் கண்டறிவதற்கும், அதற்கான சிகிச்சை சேவைகளைத் திறம்பட முன்னெடுப்பதற்கும் புதிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 12 அதிநவீன கோல்போஸ்கோபி இயந்திரங்கள் அரச மருத்துவமனை கட்டமைப்பில் இணைக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது அநுராதபுரம், யாழ்ப்பாணம், கண்டி, கம்பஹா, மாத்தறை மற்றும் மட்டக்களப்பு உள்ளிட்ட மருத்துவமனைகளில் இந்த இயந்திரங்கள் பயன்பாட்டுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் முதற் கட்டத்திற்காக 72 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், இரண்டாம் கட்டத்திற்காக மேலும் 42 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (அ)




# அக்கரைப்பற்று மாவட்ட நீதிபதி இடைநிறுத்தம்!

கொழும்பு, மே. 26

அக்கரைப்பற்று மாவட்ட நீதிபதியாக பணியாற்றிய ஏ.சி. றிஸ்வான், நீதிச்சேவை ஆணைக் குழுவினால் கடந்த 22ஆம் திகதி முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

இது தொடர்பான அறிவிப்பு தொலைநகல் மூலம் அக்கரைப்பற்று நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நீதிபதி ஏ.சி. றிஸ்வானுக்கு எதிராக நீதிச்சேவை ஆணைக் குழுவின் விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# சந்தேகத்துக்கிடமான முறையில் வயோதிபப் பெண் உயிரிழப்பு!

கொழும்பு, மே. 26

கட்டானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அக்கரபனஹ பகுதியில் உள்ள வீடொன்றினுள் பெண் ஒருவர் சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்துள்ளதாக கட்டானை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் அக்கரபனஹ பகுதியைச் சேர்ந்த 76 வயதுடைய வயோதிபப் பெண் என தெரியவந்துள்ளது.

உயிரிழந்த பெண் வீட்டில் தனியாக வசித்து வந்துள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதுடன், பிரேத பரிசோதனை நீர்கொழும்பு வைத்தியசாலையில் நடத்தப்படவுள்ளது.

கட்டானை பொலிஸார் இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தேசிய அரசு அமையும் என்பது கட்டுக்கதை!

## பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப்

கொழும்பு, மே. 26

"தேசிய அரசாங்கம் அமைப்பதற்குரிய முயற்சி இடம்பெறுவதாக வெளியாகும் தகவல்கள் அப்பட்டமான பொய்யாகும்." - என்று பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் வழங்கிய நேர்காணலின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

தேசிய அரசாங்கம் அமைப்பதற்கு முயற்சி இடம்பெறுவதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதன் நிமித்தமே மகிந்த சமரசிங்க, தூதுவர் பதவியை துறந்து இலங்கை வருகின்றார் எனவும், ஹர்ஷ டி சில்வா போன்றவர்களுடன் பேச்சு நடத்தப்படுவதாகவும் சில இணைய ஊடகங்களில் செய்தி வெளியானது.

இது தொடர்பில் பிரதி அமைச்சரிடம் கேள்வி எழுப்பட்டது. இதற்கு பதிலளித்த அவர்," தேசிய அரசாங்கம் அமைப்பது தொடர்பில் அரசாங்கத்துக் குள் பேச்சு நடத்தப்படவில்லை. இது நூறு சதவீதம் பொய்யான தகவலாகும்.

பொருளாதார நெருக்கடி



தொடர்பில் எதிரணி தரப்பில் போலி தகவல்கள் பரப்படுகின்றன. அந்த தகவலிலும் உண்மை இல்லை. சவாலை எதிர் கொண்டு நாட்டை முன்னோக்கி கொண்டுசெல்வதற்குரிய இயலுமை எமக்குள்ளது." என்றார் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப். (அ)

# ருமேனியாவில் வேலைவாய்ப்பு மோசடி நிறுவன பெண் பணிப்பாளருக்கு வலை!

கொழும்பு, மே. 26

ருமேனியாவில் ஆடைத் தொழிற்சாலை வேலைவாய்ப்புகளைப் பெற்றுத் தருவதாகக் கூறி 750 இற்கும் மேற்பட்டவர்களிடம் சுமார் 920 மில்லியன் ரூபா பணத்தை மோசடி செய்த நிறுவனத்தின் பெண் பணிப்பாளர் ஒருவரைக் கைது செய்வதற்கு பொலிஸ் பொது மக்களின் உதவியைக் கோரியுள்ளது.

குறித்த நிறுவனம், பலரிடம் ருமேனியாவில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி பெரிய அளவிலான நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்த மோசடிச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஹோமாகம பகுதியைச் சேர்ந்த 54 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் சந்தேகநபர் இருக்கும் இடம் அல்லது அவர் தொடர்பான ஏதேனும் துல்லியமான தகவல்கள் தெரிந்தால், பொலிஸாரைத் தொடர்பு கொண்டு தகவல் வழங்குமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே குறித்த நிறுவனத்தின் உரிமையாளர், தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் ஏமாற்றப்பட்டவர்களுக்கு பணத்தை திருப்பி வழங்கும் நிபந்தனையின்கீழ் பிணையில் செல்ல கங்கொடவில நீதிவான் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது .

# சீன வர்த்தகர்கள் மூவர் கட்டுநாயக்கவில் கைது!

கொழும்பு, மே. 26

சுமார் 60 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளைச் சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குள் கடத்தி வர முயன்ற மூன்று வெளிநாட்டு வர்த்தகர்கள் நேற்று அதிகாலை கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் 31, 36 மற்றும் 40 வயதுடைய சீன நாட்டு வர்த்தகர்கள் என விமான நிலைய சுங்கப் பிரிவு அறிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவரும், தாம் கொண்டு வந்த பயணப் பொதிகளில் எவ்விதமான சுங்க வரிகளுக்குரிய பொருள்களும் இல்லை எனக் கூறி, விமான நிலையத்தின் "பசுமை வழிப் பாதை" ஊடாகச் சுங்க அதிகாரிகளுக்குத் தெரியாமல் வெளியேற முயன்றுள்ளனர்.

இதன்போதே அங்கிருந்த சுங்க அதிகாரிகள் இவர்களை மறித்துச் சோதனைக்கு உட்படுத்தியுள்ளனர்.

சுங்க அதிகாரிகளின் அவதானத்தைத் திசைதிருப்புவதற்காக, இச்சிகரெட் தொகையை அவர் கள் சீனாவில் கொள்வனவு செய்து, முதலில் மலேசியாவின் கோலாலம்பூர் நகருக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

பின்னர், அங்கிருந்தே அவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்கள் கொண்டு வந்த 6 பயணப் பொதிகளைச் சுங்க அதிகாரிகள் சோதனையிட்ட போது, அவற்றில் மிகவும் நுணுக்கமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 202 சிகரெட் பொதிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இவற்றினுள் ஒட்டுமொத்தமாக 40,000 சிகரெட்டுகள் அடங்கியிருந்ததாகச் சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட இந்த வெளிநாட்டு சிகரெட் தொகையின் ஒட்டுமொத்த சந்தைப் பெறுமதி சுமார் 60 இலட்சத்து 60 ஆயிரம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட மூன்று சீனப் பிரஜைகளும் தற்போது கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளின் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். (அ)

# ஹேமரத்ன தேரர் வழக்கில் பொலிஸார் மீது சந்தேகம்!

## துமிந்த நாகமுவ குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 26

15 வயது சிறுமி துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட விவகாரம் தொடர்பில் பல்லேகம ஹேமரத்ன தேரருக்கு எதிராக கடந்த 10 ஏப்ரல் மாதம் ஆம் திகதியே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. பாதிக்கப்பட்ட சிறுமிக்கு நீண்டகாலமாக திட்டமிட்டு நடத்தப்பட்ட ஒரு குற்றச்செயல் என்று சிறுமி அளித்த வாக்கு மூலம் மூலம் வெளிப்படுத்தப்பட்டது. இருப்பினும் குறித்த விடயம் தொடர்பாக பொலிஸார் மௌனம் காத்து வந்ததாகவும் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் கடுமையான அழுத்தங்கள் மற்றும் தலையீடுகளுக்கு பின்னரே பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மக்கள் போராட்ட முன்னணியின் தேசிய அமைப்பாளர் துமிந்த நாகமுவ தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், சந்தேக நபரான தேரர் கைது செய்யப்படுவதையோ அல்லது சிறை வைக்கப்படுவதையோ தவிர்ப்பதற்காக திட்டமிட்ட அடிப்படையில் அரச மற்றும் தனியார் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு அவருக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டது. அத்துடன் வெறும் 2 வாரங்களுக்குள் பொலிஸார் அனைத்து விசாரணைகளையும் முடித்துவிட்டதாக நீதிமன்றத்துக்கு அவசர அவசரமாக அறிவித்த போதிலும், தேரரின் கையடக்கத் தொலைபேசியிலிருந்து பாதிக்கப்பட்ட சிறுமிக்கு மேற்கொள்ளப்பட்ட 84 அழைப்புகள் தொடர்பான தரவுகளோ அல்லது சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை கோரிய டி.என்.ஏ பரிசோதனை அறிக்கைகளோ நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. ஆனால் தேரருக்கு பிணை வழங்க இணக்கம் தெரிவித்தமை சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. பொலிஸாரும், சட்டமா அதிபர் திணைக்களமும், பிணை வழங்குவதற்கு எவ்வித எதிர்ப்பையும் வெளியிடாமல், நீதிமன்றத்தில் அதற்கான பின்னணியை மிக நேர்த்தியாக அமைத்துக் கொடுத்துள்ளது.

மேலும், இந்த வழக்கிற்காக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சார்பில் நீதிமன்றத்தில் முன்னின்ற சட்டத்தரணி சஞ்சீவனிக்கு எதிராக, பொலிஸ் மற்றும் புலனாய்வுத் துறையினரின் பின்னணியுடன் சமூக ஊடகங்களில் திட்டமிட்ட அவதூறுப் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

தற்போ தைய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மற்றும் பாதுகாப்பு செயலாளர் ரவி செனவி ரத்ன ஆகியோருடன் இந்த தேரருக்கு இருக்கும் நெருங்கிய அரசியல் மற்றும் குடும்ப உறவு களே சட்டத்தை வளைப்பதற் குக் காரணம் ஆகும்.

புதிய அரசியல் கலாச்சாரத்தை கொண்டு வருவதாகக் கூறி ஆட்சிக்கு வந்த அரசாங்கம், குற்றவாளிகளைப் பாதுகாக்கும் பழைய அரசியல் கலாசாரத் தையே தொடர்கிறது- என்றார். (அ)

# உள்நாட்டு சந்தையில் டொலர் மதிப்பை வெற்றிகரமாக கட்டுப்படுத்தியுள்ளோம்!

## வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க

கொழும்பு, மே. 26

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள யுத்த சூழ்நிலை மற்றும் உலகளாவிய நெருக்கடிகளுக்கு மத்தியிலும் இலங்கையின் பொருளாதாரத்தை பாதுகாத்து மக்களின் அன்றாட வாழ்க்கையைத் தடையின்றி முன்னெடுத்துச் செல்வதற்கு அரசாங்கம் பல்வேறு ஆக்கப்பூர்வமான திட்டங்களை மேற்கொண்டுள்ளதுடன் உள்நாட்டுச் சந்தையில் டொலரின் மதிப்பை அரசாங்கம் வெற்றிகரமாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளது என்று வர்த்தக வாணிப உணவுப் பாதுகாப்பு மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-சர்வதேச ரீதியில் ஏற்பட்டுள்ள எரிபொருள் மற்றும் எரிசக்தி நெருக்கடிகள் காரணமாக இறக்குமதி செலவுகள் அதிகரித்துள்ளது.

அதேபோல் பல்வேறு துறைகளிலும் நெருக்கடிகள் ஏற்பட்ட போதிலும் உள்நாட்டுச் சந்தையில் டொலரின் மதிப்பை அரசாங்கம் வெற்றிகரமாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளது.

அதற்காக அரசாங்கம் மின்சாரக் கட்டணம் மற்றும் எரிபொருள்களின் விலையில் மாற்றம்,

கியூ.ஆர் குறியீடு அறிமுகம் போன்ற பல்வேறு ஆக்கப்பூர்வமான திட்டங் களை மேற்கொண்டுள்ளது.

அதேபோல் வாகன இறக்குமதிக்கான வரிகளை 15 வீதம் வரை அதிகரித்ததன் மூலமும் தேவையற்ற சொகுசு வாகன இறக்குமதிகளைக் கட்டுபடுத்தியதன் மூலமே இந்த சாதகமான நிலைமை எட்டப்பட்டுள்ளது.

சில நாள்களுக்கு முன்னால் 350 முதல் 355 ரூபா வரை அதிகரித்த டொலரின் பெறுமதி தற்போது 330 முதல் 345 ரூபா வரையான மட்டத்துக்கு வீழ்ச்சியடைந்துள்ளது.

இதேவேளை,

டொலர் வீக் கத்தை ஒரு காரணமாக வைத்து நுகர்வோரை சுரண்டும் நோக்கில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைத் தன்னிச்சையாக அதிகரிக்கும் வர்த்தகர்களுக்கு எதிராக நுகர்வோர் விவகார அதிகார சபையினூடாக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

குறிப்பாக கீரி சம்பா அரிசிக்கு 255 ரூபாவும் சம்பா அரிசிக்கு 240 ரூபாவும் கட்டுப்பாட்டு விலையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதற்கு அதிகமாக விற்கும் வர்த்தகர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும். நாட்டில் போதுமான அளவு நாடு மற்றும் வெள்ளை அரிசி 3 மாதங்களுக்கு வரை கையிருப்பில் உள்ள நிலையில் சிறிய மற்றும் நடுத்தர அளவி லான அரிசி உரிமையாளர்கள் எதிர்கொள்ளும் வங்கி கடன் நெருக்கடிகள் குறித்து நிதியமைச்சுடன் கலந்துரையாடி தீர்வு காண்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது- என்றார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## தேர்தல் சட்டங்கள் குறித்து...

சீர்திருத்தங்களையும் திருத்தங்களையும் பரிந்துரைப்பதும் இந்தக் குழுவின் பணியாகும்.

மேலே குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் விரிவான ஆய்வுகளை நடத்துவது அவசியம் எனக் குழு தீர்மானிக்கும் பட்சத்தில், எந்தவொரு நபரையும் குழு முன்னிலையில் அழைப்பதற்கும், எந்தவொரு ஆவணம் அல்லது அறிக்கையை சமர்ப்பிக்கக் கோருவதற்கும், குழு அவசியமெனக் கருதும் எழுத்துபூர்வமான அல்லது வாய்மொழியான அனைத்துச் சான்றுகளைப் பெறுவதற்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது.

அதேநேரம், குழுவின் பணிகளுக்கு உதவுவதற்காக, தொடர்புடைய துறைகளில் நிபுணத்துவம் பெற்ற நபர்கள் மற்றும் வல்லுநர்களின் சேவைகளைப் பயன்படுத்திக்கொள்ளும் அதிகாரமும் அதற்கு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, குழுவின் பணிகள் குறித்து பொதுமக்களின் கருத்தைப் பெறவும், இந்த மதிப்பாய்வு நடைமுறை பற்றி பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்கும் குழுவின் உறுப்பினர்கள் ஏகமனதாக இணங்கினர்.

இக்குழுக் கூட்டத்தில் பிரதியமைச்சர் சுனில் வட்டகல, பாராளுமன்ற உறுப்பினர்களான ரவி கருணாநாயக்க, ஜே.சீ. அலவத்துவல, ஹர்ஷன ராஜகருணா, கதிரவேலு சண்முகம் குகதாசன், ருவன்திலக ஜயக்கொடி, துஷாரி ஜயசிங்ஹ, சந்திம ஹெட்டியாராச்சி ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

## மக்கள் பிரதிநிதியல்லாத...

ஜனாதிபதியோ அல்லது பிரதமரோ எடுப்பதில்லை. இந்த அரசாங்கத்தின் முடிவுகள் “பெலவத்தை” என்ற இடத்தில்தான் எடுக்கப்படுகின்றன. பெலவத்தையின் ஆன்மீகத் தலைவர், அதாவது இந்த அரசாங்கத்தின் ஆன்மீகத் தலைவர் தான் ரில்வின் சில்வா.

ரில்வின் சில்வா தற்போது யாழ்ப்பாணத்துக்கு சென்று இந்த ஆண்டு மாகாண சபைத் தேர்தல் நடைபெறாது எனக் கூறுகிறார். அடுத்த வருடம் நடத்த முடியுமா என்று பார்ப்போம் என்கிறார். அப்படியானால், இன்று இந்த நாட்டில் மக்கள் பிரதிநிதியாக இல்லாத, இந்த கட்சியின் பொதுச் செயலாளராக இருக்கும் ஒருவர், நாட்டின் முடிவுகளை எடுக்கும் அளவுக்கு சக்திவாய்ந்த நபராக மாறியுள்ளார் என்பது மிகவும் தெளிவாகிறது. இன்று ஜனநாயகம் என்னவாகியிருக்கிறது? அப்படியானால், ஜனாதிபதி, அமைச்சரவை மற்றும் பாராளுமன்றத்துக்கும் மேலாக இந்த ரில்வின் சில்வாதான் இருக்கிறார். எனவே, தேர்தல் ஆணைக்குழு என்று ஒன்று தேவையில்லை அதனை மூடிவிடலாம். அது வீண் விரயம்.

ஏனெனில், மாகாண சபை தேர்தலை நடத்துவது குறித்து தேர்தல் ஆணைக்குழுவோ அல்லது பாராளுமன்றமோ முடிவெடுப்பதில்லை. அது ரில்வின் அவர்களின் முடிவின்படியே நடக்கிறது-என்றார். (அ)

## பாடசாலையில் பிள்ளையை...

இடையில் வேகமாக மோட்டார் சைக்கிள் ஒடி இளைஞர்கள் குழு ஒன்று சாகசம் செய்துள்ளது. அதனால் வீதியில் பயணித்தவர்கள் அச்சத்துடன் பயணித்துள்ளார்கள்.

இந்நிலையில் பாடசாலையில் தனது பிள்ளையை ஏற்ற மோட்டார் சைக்கிளில் பயணித்த தாய் மீது வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து மோதியதில் தாய் சம்பவ இடத்திலையே உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் மற்றைய மோட்டார் சைக்கிள் ஓட்டியான இளைஞன் படுகாயமடைந்த நிலையில், கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## ஏற்றுமதி வருமானம்...

வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளதாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.

இலங்கை சுங்கத் திணைக்களம் வெளியிட்டுள்ள தற்காலிகத் தரவுகள் மற்றும் ரத்தினக்கல், ஆபரணங்கள் மற்றும் பெட்ரோலியப் பொருள்களுக்கான மதிப்பிடப்பட்ட புள்ளிவிவரங்களின்படி, 2026 ஏப்ரலில் வர்த்தகப் பொருள்களின் ஏற்றுமதி 9.87 சதவீதத்தால் அதிகரித்து 1,063.77 மில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்ந்துள்ளது.

அதேவேளையில், 2026 ஏப்ரல் மாதத்தில் சேவைத் துறை ஏற்றுமதி மூலமான வருவாய் 317.16 மில்லியன் அமெரிக்க டொலர்களாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் ஒட்டுமொத்த ஏற்றுமதித் திறனை முன்னெடுத்துச் செல்வதில் சேவைத் துறையின் வளர்ந்து வரும் முக்கியத்துவத்தை இது அடிக்கோடிட்டுக் காட்டுவதாக ஏற்றுமதி அபிவிருத்தி சபை குறிப்பிட்டுள்ளது.

கூட்டு அடிப்படையில், 2026 ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலான காலப்பகுதிக்கான மொத்த ஏற்றுமதி வருமானம் 5,784.38 மில்லியன் அமெரிக்க டொலர்களாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன், இது 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 4.3 வீத வளர்ச்சியைப் பிரதிபலிக்கிறது. (அ)

## குற்றவாளிகளுக்கு தண்டனை...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நீங்கள் அனைவரும் ஒன்றிணைந்து தோற்கடித்த சில சக்திகள் இருக்கின்றன. ஆனால், நினைவில் வைத்துக்கொள்ளுங்கள், அவை அழிந்து போகவில்லை. அப்படி அழிந்து போகாத அந்தச் சக்திகளே இப்போது வெவ்வேறு வடிவங்களில் பூதங்களாக வருகின்றன. அழிந்து போகாத அந்தச் சக்திகளை தங்களை எதிர்க்கட்சி என்று நினைத்துக்கொண்டு பூதங்களாக உலா வரத் தொடங்கியுள்ளன. இப்போது அனைவரும் பதற்றமடைந்துள்ளனர். இப்போது எல்லா விடயங்களும் வெளிவரத் தொடங்கியுள்ளன.

நமது நாட்டில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் ஒன்று நடந்தது. அது ஒரு பாரிய அழிலாகும். ஆனால், இப்போது இறுதியாக என்ன வெளிப்பட்டுக் கொண்டு இருக்கிறது? உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடந்து ஒரு வாரத்தின் பின்னர், பிள்ளையானைச் சந்திப்பதற்காக அந்த மூன்று பேரும் செல்லுகின்றார்கள். யார் அவர்கள்? மகிந்த, நாமல், பஸில். அவைதான் இப்போது அம்பலமாகத் தொடங்கியுள்ளன.

அப்படி இருக்க அவர்கள் சும்மா இருப்பார்களா? துள்ளிக் குதிப்பார்கள். ஒரு அப்பட்டமான திருட்டுக் குடும்பம். வேறென்ன சொல்வது? அப்படி இருக்க ஒரு நாடு எஞ்சி இருந்ததே பெரிய விடயம். இப்போது என்ன நடந்திருக்கிறது? இலங்கையில் முதல் தடவையாக இவை அனைத்தும் வெளிச்சத்துக்கு வரத் தொடங்கியுள்ளன.

எமது நாட்டின் குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்க ஆண்டாக இது மாறும் என நாம் நம்புகின்றோம்-என்றார். (அ)

## வடக்கு பொலிஸ் நிலையங்களுக்கு...

அதேவேளை, இந்த அன்பளிப்பை பாராட்டும் வகையில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய இந்திய தூதுவருக்கு நினைவுப் பரிசொன்றையும் வழங்கினார்.

இந்த நிகழ்வில் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, பிரதியமைச்சர் சுனில் வட்டகல, அமைச்சின் செயலாளர் ரவி சேனவிரத்ன, டிமோ நிறுவனத்தின் பொது முகாமையாளர் ராஜீவ் பண்டிதகே, இந்திய உயர்ஸ்தானிகரக அதிகாரிகள் மற்றும் இலங்கை பொலிஸின் மூத்த அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (அ)

## முள்ளிக்குளத்தில் 753 ஏக்கர்...

காணிகளை மக்கள் பயன்படுத்திக்கொள்ள முடியாத நிலையிருப்பின், அது தொடர்பில் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் கலந்துரையாடி அது தொடர்பான தீர்மானங்களை உரிய அமைச்சுக்கு அனுப்பிவைக்கின்றபோது அந்தக் காணிகளை மக்களுக்கு விடுவித்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார்.

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர தலைமையிலான குழுவினர் நேற்று மன்னாருக்கு விஜயம் செய்து கடற்படையினர் வசமுள்ள தனியார் காணிகளை பார்வையிட்டனர்.

முள்ளிக்குளம், சிலாபத்துறை, தலைமன்னார், வங்காலைப்பாடு மற்றும் பள்ளிமுனை ஆகிய பகுதிகளில் உள்ள காணிகளை குழுவினர், குழுவினர் நேரடியாக சென்று பார்வையிட்டனர்.

மக்கள் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து, வேறு இடங்களில் குடிபெயர்ந்தனர்.

யுத்தம் முடிவடைந்து 17 வருடங்களுக்கு மேலாக காணிகள் விடுவிக்கப்படாத நிலையல், காணிகளை விடுவிக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்த விஜயத்தின்போது, பிரதேச செயலாளர்கள் மற்றும் திணைக்கள தலைவர்களும் இணைந்து கொண் டனர்.

அதன் தொடர்ச்சியாக நேற்று மதியம் மன்னார் மாவட்ட செயலகத்தில் விசேட கலந்துரையாடல் இடம் பெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற கலந்துரையாடலில், பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர, பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், து.ரவிகரன், காதர் மஸ்தான், எஸ்.ஜெகதீஸ்வரன் ஆகியோரும்,

இராணுவ தளபதி, கடற்படைத் தளபதி, மேலதிக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் உட்பட பலரும் பங்கேற் றனர்.

தமது விஜயம் தொடர்பில் தெளிவுபடுத்திய பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர, மக்களின் காணிகளை மக்களிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்படவிருப்பதாக தெரிவித்தார். (அ)

## வித்தியா கொலை குற்றவாளி...

இந்த சம்பவம் முழு நாட்டையும் உலுக்கி இருந்த நிலையில், விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் சம்பவம் தொடர்பில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று சகோதரர்கள், மற்றுமொரு குடும்பத்தை சேர்ந்த இரு சகோதரர்கள் உள்ளிட்ட 09 பேரை கைது செய்தனர்.

ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் நடைபெற்ற சுருக்கமுறையற்ற நீதிமன்ற விசாரணைகளை தொடர்ந்து வழக்கேடுகள் சட்டமா அதிபர் திணைக்களத்தில் பாரப்படுத்தப்பட்டன.

அதனைத் தொடர்ந்து 2017ஆம் ஆண்டு ஜூன் மாதம் வடக்கு மாகணத்தில் முதலாவது “ட்ரயல் அட் பார்” தீர்ப்பாய முறைமையிலான நீதிமன்ற அமர்வு அப்போதைய மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசி மகேந்தி ரன் தலைமையில் மேல் நீதிமன்ற நீதிபதிகள் அன்னலிங் கம் பிரேமசங்கர், மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இதன்போது 09 எதிரிகளுக்கு எதிராக 41 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

“ட்ரயல் அட் பார்” தீர்ப்பாய முறைமையிலான விசாரணைகள் நடைபெற்று தீர்ப்பாயம் கடந்த 2017ஆம் ஆண்டு செப்ரெம்பர் 27ஆம் திகதி இருவர் மீதான குற்றச் சாட்டுக்களை சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்க முடி யாதமையால், இருவர் விடுதலை செய்யப்பட்டதுடன் ஏனைய ஏழு பேருக்கும் மரண தண்டனை விதித்தும், 30 வருட சிறை தண்டனை விதித்தும் தீர்ப்பளித்தது.

குறித்த தீர்ப்பை எதிர்த்து 07 பேரும் உயர்நீதிமன்றில் மேன் முறையீடு செய்ததை அடுத்து, பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான ஐவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில், இருவர் மீதான தண்டனையை நீக்கி, ஏனையவர்கள் மீதான தண்டனையை கடந்த 06ஆம் திகதி உறுதி செய்தது.

இந்நிலையில், தண்டனை உறுதி செய்யப்பட்டவர்க ளின் தீர்ப்பை மீளவும் உறுதி செய்வதற்காக குறித்த வழக்கு யாழ். மேல் நீதிமன்றில் நேற்று திங்கள்கிழமை அழைக் கப்பட்டது.

அதற்காக நீதிமன்றில் குற்றவாளிகளை முற்படுத்த ஏதுவாக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை குற்றவாளிகளை யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு மாற்றி இருந்தனர்.

இந்நிலையில் நேற்று நீதிமன்றுக்கு அழைத்து செல்வதற்கான ஏற்பாடுகளை யாழ்ப்பாண சிறைச்சாலை அதிகாரிகள் முன்னெடுத்து இருந்த நிலையில், குளிப்பதற்காக சென்ற ஜெயக்குமார், குளியலிடத்தில் தனது உயிரை மாய்த்துள்ளார்.

யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதேவேளை, உயிரை மாய்த்துக்கொண்ட ஜெயக்குமாரின் சகோதரர்கள் இருவரும் மாணவி கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட நிலையில், ஒருவர் மீதான குற்றச்சாட்டுக்களை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க முடியாது போனமையால் “ட்ரயல் அட் பார்” தீர்ப்பா யம் வழக்கில் இருந்து அவரை விடுவித்து இருந்தது.

ஜெயக்குமாரும் மற்றைய சகோதரனும் மரண தண்டனையை அனுபவித்து வந்த நிலையில் சிறையில் நோய் வாய்ப்பட்டு சகோதரர் உயிரிழந்தார். தற்போது மற்றையவரும் தனது உயிரை மாய்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, யாழ்ப்பாண சிறைச்சாலையில் நேற்று திங்கள்கிழமை உயிரை மாய்த்துக்கொண்ட புங்குடுதீவு மாணவி கொலை குற்றவாளியின் இறுதிச் சடங்கை அரச செலவில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது.

வைத்தியசாலையில் சடலம் ஒப்படைக்கப்பட்ட நிலை யில், சடலத்தை ஜெயக்குமாரின் மனைவி, தனது கணவர் ஜெயக்குமார் என்பதை அடையாளம் காட்டியதை அடுத்து, சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் உடற் கூற்று பரிசோதனை நடைபெற்றது.

உடற்கூற்று பரிசோதனையில் உயிரை மாய்த்துக் கொண்டமை உறுதி செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து சடலத்தை மனைவியிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டவேளை, தமது குடும்ப பொருளாதார நிலைமை காரணமாக இறுதிச் சடங்கை மேற்கொள்ள முடியாது எனத் தெரிவித்த மனைவி, அதனை அரச செலவில் செய்யுமாறு கோரி சடலத்தை பொறுப்பேற்க மறுத்துள்ளார்.

இதனை அடுத்து அரச செலவில் இறுதி சடங்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையில், சடலம் யாழ்.போதனா வைத்தியசாலை பிணவறையில் வைக்கப்பட்டுள்ளது. (அ)

## பலாலி பொலிஸார் பொய்...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த 2025 டிசெம்பர் 4ஆம் திகதி தையிட்டியில் அமைந்துள்ள சட்டவிரோத திஸ்ஸ விகாரைக்கு எதிராக இடம்பெற்ற போராட்டம் குறித்து நேற்று முன் தினம் பலாலி பொலிஸார் என்னிடம் வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

அன்றைய தினம் இடம்பெற்ற போராட்டத்தை குழப்பும் வகையில் பொலிஸார் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டனர்.

அதற்கு பின்னர் மல்லாகம் நீதிமன்றத்தில் பொலிஸார் ஒரு பொய்யான வழக்கை பதிவு செய்தனர்.

போக்குவரத்துக்கும், பொலிஸாரின் கடமைகளுக்கும் இடையூறு விளைத்துவித்ததாக தெரிவித்தே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

அந்த வழக்குக்காக நாங்கள் நீதிமன்றத்துக்கு சமூகம் அளித்த நிலையில், அது தொடர்பான வாக்குமூலத்தை பொலிஸ் நிலையத்துக்கு சென்று வழங்குமாறு நீதிமன்றம் எமக்கு அறிவுறுத்தியது.

அதன் பிரகாரம் நேற்று முன்தினம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

நாங்கள் இந்த போராட்டங்களை ஜனநாயக முறையில், நீதிமன்றக் கட்டளைகளுக்கு மதிப்பளித்து, பொலிஸாரின் அறிவுறுத்தல்களுக்கு மதிப்பளித்து நடத்தி வருகின்றபோதிலும், அந்தப் போராட்டத்தை நிறுத்திச் சட்டவிரோத விகாரைக்கு காணியை வழங்கிவிட வேண்டும் என்பதற்காக இனவாத பொலிஸாரால் எங்களுக்கு எதிராக அவ்வப்போது இவ்வாறு வழக்குகள் தாக்கல் செய்யப்படுகின்றன.

அதன் தொடர்ச்சியாகவே நேற்று முன்தினமும் இவ்வாறு வாக்குமூம் மூலம் பதிவு செய்யப்பட்டது-என்றார். (அ)

## வீரவன்ஸவுக்கு...

சரீரப் பிணைகளின் கீழ் அவர் விடுவிக்கப்பட்டார்.

பத்தரமுல்லையில் உள்ள இராணுவ நினைவிடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இராணுவ வெற்றி கொண்டாட்டத்திற்கான ஒத்திகை நிகழ்வுக்கு இடையூறு ஏற்படுத்தியமை தொடர்பில் வாக்குமூலம் அளிப்பதற்காக நேற்று தலங்கம பொலிஸ் நிலையத்தில் அவர் முன்னிலையானார்.

இந்நிலையில் வாக்குமூலம் வழங்கலின் பின்னர் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட பின்னர் கடுவெல நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# அரச அடக்குமுறைக்கு எதிராக அனைவரும் ஒன்றுபடவேண்டும்



## தயாசிறி ஜயசேகர அழைப்பு

கொழும்பு, மே. 26

அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு எதிராகவும் ஜனநாயக விரோத செயல்களுக்கு எதிராகவும் கட்சி பேதங்களை மறந்து அனைவரும் ஒன்றுபட வேண்டும். அதன் மூலமே நாட்டின் எதிர்காலத்தை பாதுகாக்க முடியும் என ஐக்கிய மக்கள் முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

பொய்யையும் திருட்டையும் ஒன்றாக தோற்கடிப்போம் எனும் தொனிப்பொருளில் கூட்டு எதிர்க்கட்சி நேற்று முன் தினம் கம்பஹா ஜாஎல பிரேதேசத்தில் நடத்திய மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்கள் விடுதலை முன்னணி அரசாங்கத்துக்கு எதிராக கட்சி பேதங்களை மறந்து அனைவரும் ஒன்றுபடவேண்டும். அரசாங்கத்தின் பிழையான தீர்மானங்களுக்கு எதிராக குரல் கொடுக்க முன்வரவேண்டும். அரசாங்கத்திற்கு எதிராக ஒன்றுபட்டு செயல்பட முடியுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் நாங்கள ஒன்றுபடவேண்டும்.

நாட்டின் ஊழலை இல்லாதொழிப்பதாக தெரிவித்தே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. ஆனால் ஆட்சிக்கு வந்து சில மாதங்களில் 323 கொள்கலன்களை விடுவித்து பாரிய மோசடியை செய்திருக்கிறது. இந்த கொள்கலன் விடுவிப்பு தொடர்பில் எந்த நடவடிக்கையும் இல்லை. அதேபோன்று நிலக்கரி கொள்வனவு மோசடி, டீசல் திருட்டு என பல மோசடிகளை இவர்கள் மேற்கொண்டுள்ளனர்.

அநுரகுமார திசாநாயக்க எதிர்க்கட்சியில் இருக்கும்போது, சிநேகித அரசியல் செய்வதாக அப்போது இருந்த தலைவர்களை குற்றம் சாட்டி வந்தார். அந்த சிநேகித அரசியலையே அநுரகுமார ஜனாதிபதியும் தற்போது மேற்கொண்டு வருகிறார்.

அதேபோன்று அரசாங்கம் சட்டத்தை கையில் எடுத்துக்கொண்டுள்ளது. ஜனாதிபதி மே தின கூட்டத்தில் தெரிவித்த வழக்கு தீர்ப்பு, சரண குணவர்த்தனவின் வழக்கு தீர்ப்பாகும். ஆனால் ஜனாதிபதி அன்று 25ஆம் திகதி என்றே குறிப்பிட்டார். ஆனால் 26ஆம் திகதியே இவரின் தீர்ப்பு வழங்கப்பட இருக்கிறது. அதேநேரம் இந்த ஒருவருட காலத்தில் 40 இற்கும் அதிகமான நீதிபதிகள் இடை நிறுத்தப்பட்டிருக்கின்றனர். அத்துடன் உயர் நீதிமன்றம் மேல் நீதிமன்றம் போன்றவற்றில் பல வெற்றிடங்கள் காணப்படுகின்றன. பல மாதங்கள் கடந்தம் ஜனாதிபதி அந்த நீதிமன்றங்களில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்பாமல் இருக்கிறார்-என்றார். (அ)

## சுரேஷ் சாலே மீது பழி போடுவதை எந்த வகையிலும் ஏற்கமுடியாது!

### முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர சாடல்

கொழும்பு, மே. 26

வெளிநாட்டில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள அசாத் மௌலானாவின் போலியான வாக்குமூலத்தின் அடிப்படையில், உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதக் குண்டுத்தாக்குதலின் பிரதான சூத்திரதாரி சுரேஷ் சாலே என்று பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலிப பீரிஸ் நீதிமன்றத்தில் குறிப்பிடுவதை எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தரும் முன்னாள் அமைச்சருமான சரத் வீரசேகர தெரிவித்தார்.

முற்றிலும் அரசியல் நோக்கங்களை இலக்காகக் கொண்டே இந்த அபாண்டமான குற்றச்சாட்டு தற்போதைய அரசால் முன்வைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்விடயம் குறித்துக் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரி முன்னாள் அரச புலனாய்வுப் பிரிவு தலைவரான சுரேஷ் சாலே எனச் சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளமை அரசியல் உள்நோக்கம் கொண்டது.

பிரான்ஸ் நாட்டில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள அசாத் மௌலானா, தனது புகலிடக் கோரிக்கையை வலுப்படுத்துவதற்காகக் கூறிய கட்டுக்கதைகளையும் வாக்குமூலத்தையும் அடிப்படையாகக் கொண்டே, பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலிப பீரிஸ் தற்போது சுரேஷ் சாலேயைப் பிரதான சூத்திரதாரியாகச் சித்திரித்துள்ளார்.

இந்தத் தாக்குதலின் உண்மையான பிரதான சூத்திரதாரி சஹ்ரான் ஹாசிம் என்பதும், அவரே தாக்குதல்களை வழிநடத்தினார் என்பதும் இதற்கு முன்னர் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியாகவும் நடத்தப்பட்ட பல்வேறு பாரிய விசாரணைகள் மற்றும் ஆணைக்குழு அறிக்கைகள் ஊடாகத் திட்டவட்டமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவ்வாறிருக்கையில், இப்போது திடீரெனப் புதியதொரு விடயத்தைக் நீதிமன்றத்தில் குறிப்பிடுவது ஒட்டுமொத்த நாட்டு மக்களையும் தவறாக வழிநடத்தும் ஒரு கீழ்த்தரமான செயற்பாடாகும்.

தற்போதைய அரசு கொடூரமான உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் விவகாரத்தை முழுமையாக அரசியல் மயப்படுத்தியுள்ளது. தேர்தல் காலத்தில் கத்தோலிக்க சபைக்கும், கத்தோலிக்க மக்களுக்கும் வழங்கிய போலி வாக்குறுதிகள் எதனையும் நிறைவேற்ற முடியாத நிலையிலேயே அரசு தற்போது இவ்வாறு திசைதிருப்பும் வேலைகளில் ஈடுபட்டுள்ளது.

அரசியல் தேவைகளுக்காகப் புலனாய்வுத் துறை அதிகாரிகளைப் பலிக்கடாவாக்குவதை நிறுத்தி, யதார்த்தமான முறையில் சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும்.- என்றார். (அ)

## சட்டவிரோதன முறையில் லொறியில் 22 பசுக்களை ஏற்றிச் சென்றவர் கைது!

கிளிநொச்சி, மே. 26

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பகுதியில், சட்டவி ரோதமான முறையில் 22 பசுக்களை லொறியில் ஏற்றிச் சென்ற சந்தேக நபர் ஒருவர் லொறியுடன் கைது செய்யப் பட்டார்.

கிளிநொச்சி பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய, சோதனையில் ஈடுபட்டிருந்தபோதே இந்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

சந்தேக நபர் கெக்கிராவை பகுதியைச் சேர்ந்த 40 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது நடவடிக்கையின்போது, பசு ஒன்று உயிரிழந்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளில் கிளிநொச்சி பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (அ)

## பாதாள குழுவினரிடம் 272 துப்பாக்கிகள் மீட்பு!

கொழும்பு, மே. 26

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர், வெளிநாடு சென்று தலைமறைவாகயிருந்த நிலையில் நாட்டுக்கு அழைத்து வரப்பட்ட பாதாள உலகக்குழு உறுப்பினர்கள் மற்றும் குற்றவாளிகள் வழங்கிய தகவலுக்கமைய இதுவரை 83 ரி-56 ரக துப்பாக்கிகள் உள்ளடங்கலாக சுமார் 272 துப்பாக்கிகள் மீட்கப்பட்டுள்ளதாக கொழும்பு மாவட்டத்துக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் நிஷாந்த சொய்சா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டினுள்ள மனிதப் படுகொலைகள் உள்ளிட்ட திட்டமிட்ட பாரிய குற்றச்செயல்கள், போதைப்பொருள் கடத்தல்களில் ஈடுபட்டு சட்ட நடவடிக்கைகளை தவிர்ப்பதற்காக வெளிநாட்டு சென்று தலைமறைவாகியிருந்த பாதாள உலகக்குழு உறுப்பினர்கள் மற்றும் ஏனைய குற்றவாளிகள் அந்நாட்டு பாதுகாப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டு நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர், சர்வதேச பொலிஸாரால் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்ட 35 சந்தேக நபர்களும், சர்வதேச நாடுகளுக்கிடையிலான இராஜதந்திர அடிப்படையில் குற்றச்செயல்களுடன் தொடர்புடைய பொலிஸாரால் தேடப்பட்டு வந்த 33 பேரும் கைது செய்யப்பட்டு நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

அவ்வாறு நாட்டுக்கு அழைத்துவரப்பட்ட பாதாள உலகக்குழு தலைவர்கள், பாதாள உலகக்குழு உறுப்பினர்கள் மற்றும் ஏனைய குற்றங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்களும் குற்றப்புலனாய்வு பிரிவின் விசேட பிரிவுகளில் தடுத்துவைக்கப்பட்டு தொடர்ச்சியாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். மேற்படி சந்தேகநபர்கள் வழங்கிய தகவலுக்கமைய மறைத்து வைக்கப்பட்டிருந்த பல்வேறு சட்டவிரோத துப்பாக்கிகள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. அந்த வகையில், 83 ரி-56 ரக துப்பாக்கிகள், ஒரு எம் 16 ரக துப்பாக்கி, 13 கைத்துப்பாக்கிகள் மற்றும் ரிவோல்வர் ரக 75 துப்பாக்கிகள் உள்ளடங்களாக 272 துப்பாக்கிகள் மீட்கப்பட்டுள்ளன. கட்டுத்துப்பாக்கி, உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகளும் இவ்வாறு பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன-என்றார். (அ)

## அரசாங்கத்தின் செயற்திறனை மத்திய வங்கி தரவு நிரூபிக்கும்!

### பிரதி அமைச்சர் நளின் ஹேவகே

கொழும்பு, மே. 26

பல வருடங்கள் அனுபவம் வாய்ந்தவர்கள் என்று கூறிக்கொண்டு ஆட்சி செய்தவர்களை மக்கள் வீதிக்கு இறங்கி விரட்டியடித்த வரலாறு அனைவரும் தெரிந்த விடயமாகும். தமது அரசாங்கத்தின் செயற்திறனை வெறும் பேச்சுகளாக அன்றி மத்திய வங்கி தரவுகளின் ஊடாக நிரூபிக்க முடியும் என்று தொழிற்கல்வி பிரதி அமைச்சர் நளின் ஹேவகே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அதன்படி நாட்டின் பொருளாதாரம் 2024 ஆம் ஆண்டில் 99.6 பில்லியன் டொலர்களாக இருந்த நிலையில் 2025 ஆம் ஆண்டின் இறுதியில் அது 108.8 பில்லியன் டொலர்களாக உயர்ந்துள்ளது. இதேவேளை தனிநபர் வருமானம் 2024 ஆம் ஆண்டில் 546 டொலர்களாக இருந்ததுடன், 2025 ஆம் ஆண்டு இறுதியில் 50,003 டொலர்களாக உயர்ந்துள்ளது. அத்துடன் வெளிநாட்டு அந்நியச் செலாவணி 2024 ஆம் ஆண்டில் 6.61 வீதமாக காணப்பட்டதுடன் 2025 ஆம் ஆண்டாகும் போது 8.1 வீதமாக வளர்ச்சியைக் கண்டுள்ளது.

மேலும் நாட்டில் தொழிலின்மை 2024 ஆம் ஆண்டு இறுதியில் 4.4 வீதத்திலிருந்து 3.9 வீதம் வரை குறைவடைந்துள்ளதுடன் சுற்றுலாத் துறை மூலமான வருமானமும் அதிகரித்துள்ளது. பொருளாதார ரீதியில் மற்றுமொரு முக்கிய மைல்கல்லாக 1978 ஆம் ஆண்டுக்கு பின்னர் மிகக் குறைந்த வரவு-செலவு 2025 ஆம் ஆண்டில் பதிவாகியுள்ளது. ஆரம்ப கணக்கில் மேலதிகத் தொகையும் உருவாகியுள்ளது. இந்த முன்னேற்றங்கள் மற்றும் பொருளாதாரத் தரவுகள் குறித்து பாராளுமன்றத்தில் விவாதிப்பதற்கு வழங்கப்பட்டபோதிலும் எதிர்க்கட்சியினர் அதில் கலந்துகொள்ளாமல் சபையிலிருந்து வெளியேறினர். தமக்கு வழங்கப்பட்ட வாய்ப்பை பயன்படுத்தி உண்மைகளை தெளிவுபடுத்த தவறிய இவ்வாறானதொரு எதிர்க்கட்சிக்கு தேவையா - என்றார். (அ)

## சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் ஜூன் நடுப் பகுதியில் வெளிவர வாய்ப்பு

கொழும்பு, மே. 26

2025 ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகள் தொடர்பாக சமூக ஊடகங்களில் வெளியாகும் செய்திகள் முற்றிலும் தவறானது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகள் எதிர்வரும் ஜூன் மாதத்தின் நடுப்பகுதிக்குள் வெளிவர வாய்ப்புள்ளதாக பரீட்சைகள் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

2025 ஆம் ஆண்டுக்கான சாதாரண தரப் பரீட்சைகள் கடந்த பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை நடைபெற்றது.

இந்த நிலையில் குறித்த பரீட்சையின் பெறுபேறுகள் வெளியாகியுள்ளதாக கடந்த வாரம் முதல் சமூக ஊடகங்களில் போலிச் செய்திகள் வெளியாகி வருகின்றன.

எனினும், 2025 ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகள் இந்த மாத இறுதி அல்லது ஜூன் மாத நடுப்பகுதிக்குள் வெளிவருவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

ஆனால், போலிய செய்திகளினால் பரீட்சார்த்திகள் மன அழுத்தத்துக்கு உள்ளாகுவதால், அவ்வாறான செய்திகளை பரப்புவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது குறித்து ஆராய்ந்து வருவதாகவும் பரீட்சைகள் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.05.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.